பூதமும் தையல்காரரும்

பால் கால்டன்

தமிழில் கிருஷ்ணன்





அன்றொரு நாள் ஒரு ஏழை தையக்காரரை ராஜா தன் கோட்டைக்கு அழைத்தார்.

"மதிப்புற்குரிய ராஜா உங்களிடம் பேச வேண்டுமாம். அதுவும் இந்த நாள் முடிவதற்கு முன்பே அழைத்து வர வேண்டும் என்று கட்டளை" என்றான் தூதுவன். இதனால் அந்தி நேரத்தில் தையல்காரர் ராஜாவின் கோட்டையை நோக்கி விரைந்தார்.

“எனக்கு ஆடை ஒன்று தைக்க வேண்டும். இதோ இந்த துணியில் இருந்து வேண்டுமான அளவு வெட்டி தைத்து கொடுங்கள். நல்ல கச்சிதமாகவும், உடுப்பதற்கு வசதியாகவும் இருக்க வேண்டும்.” என்றார் ராஜா.

“உங்களுடைய உத்தரவின் படி செய்கிறேன் ராஜா” என்றார் தையல்காரர்.




ராஜா தையக்காரரை அழைத்து “நான் கூறுவதை கவனமாக கேட்டுக் கொள்ளுங்கள் இந்த துணியை பழைய சுடுகாட்டில் உட்கார்ந்து தான் தைக்க வேண்டும் குறிப்பாக இரவில் மட்டுமே செய்ய வேண்டும். அப்போது தான் எனக்கு அதிர்ஷ்டம் வரும் என்று நம் ஜோசியர் சொல்கிறார்” என்று சொன்னார் ராஜா.



ஊருக்கே தெரிந்த கதை அந்த சுடுகாட்டில் இரவில் நடக்கும் பூதங்களின் நடமாட்டங்களும் ,அட்டகாசகங்களும். ஆனால் ராஜாவின் வார்த்தையை யார் தட்ட முடியும்.

“எனக்கு எந்த பயமும் இல்லை ராஜா, நான் துணியை தைத்து கொண்டு வருகிறேன்” என்றார் தையல்காரர்.

“சரி அப்படியே ஆகட்டும் நீங்கள் திரும்பி வரும்போது உங்களுக்கு பை நிறைய தங்க நாணயம் காத்து கொண்டிருக்கிறது” என்றார் ராஜா.



தைப்பதற்கு தேவையான பொருட்களையும், ஒரு மெழுகுவர்த்தியும் எடுப்பதற்கு தன் கடைக்கு விரைந்தார். பயம் தன்னை கவ்வி கொண்டாலும் அவர் தன் வேலையை செய்வதற்கு சுடுகாடு நோக்கி விரைந்தார்.

இரவும் கும்மிருட்டாக மாறி போனது.
பயந்து கொண்டே ஒரு வழியாக
சுடுகாட்டிற்கு வந்து சேர்ந்தார்
தையல்காரர்.






ஒரு வசதியான கல்லறையில் உட்கார்ந்து கொண்டு தையல்காரர் துணியை தைக்க ஆரம்பித்தார். ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றிக் கொண்டார்.

“பூதமாவது .. கீதமாவது .. ஒண்ணுத்தையும் காணோமே இங்கே, நான் சீக்கிரமே தைத்து முடித்து விடுவேன்” என்று தன்னை ஆசுவாசப்படுத்தி கொண்டார்.

அவர் அதை சொல்லி முடிப்பதற்குள் அவரை சுற்றி பூமியில் ஒரு பயங்கரமான சத்தத்துடன் நடுக்கம் உண்டானது.




திடீரென்று கல்லறையிலிருந்து ஒரு தலை
வெளியே நீட்டி கொண்டு வந்தது.
தையல்காரர் துணியை தைப்பதிலேயே
கவனமாக இருந்தார்.



அந்த பூதம் கல்லறையின் உயரத்தை தாண்டி வளர்ந்து கொண்டே போனது. அது தன்னுடைய பயங்கரமான குரலில் தையக்காரரை பார்த்து “ என் வீங்கிய மண்டையை பார்த்தாயா?” என்று கேட்டது.

நடுங்கி கொண்டே “நான் பாத்தேன், இதை எனக்கு தைத்து முடிக்க வேண்டும்” என்று சொல்லி கொண்டே ஆடையை தைப்பதில் மும்மரமாக இருந்தார் தையல்காரர்.





கழுத்து வரை பூதம் வளர்ந்து வந்தது. “இதோ என் பெரிய கழுத்தை பார்த்தாயா” என்றது பூதம்.

தையல்காரரின் கால் முட்டி நடுங்க தொடங்கியது . ஆனாலும் “இந்த ஆடையை எனக்கு தைத்தாக வேண்டும்” என்று கூறினார்.




பூதம் உயர உயர வளர்ந்து கொண்டே போனது.
என்னுடைய அஜானுபாகு மார்பை பார்த்தாயா?
என்று கத்தியது பூதம்.

தையல்காரரின் இதயமே நின்றுவிடும் போல்
இருந்தது. ஆனாலும் “இந்த ஆடையை எனக்கு
தைத்தாக வேண்டும்” என்று கூறினார்.





பூதம் விண்ணை தொடும் அளவிற்கு வளர்ந்து விட்டது. “இந்த உலக்கை போன்ற கையை பாத்தியா?” என்று கையை தையல்காரர் அருகில் கொண்டுவந்து ஆட்டியது.




தையல்காரரின் கைகள் வேர்த்து நடுங்க தொடங்கியது. “ஆமாம் நீ பெரும் பூதம் தான். நான் இந்த ஆடையை மட்டும் தைத்து விடுகிறேனே!” என்று கெஞ்சினார். விறுவிறுவென தையல்களை போட்டார். இன்னும் நேரம் போக போக தனக்கு ஆபத்து தான் என உணர்ந்தார் தையல்காரர்.



தடிய மரம் போல இருந்த தன் காலை உயர்த்தி " என் காலை பார்த்தாயா" என்று தையக்காரரரை கேட்டுக்கொண்டே அலறியது பூதம். தையல்காரர் கைகள் விறுவிறுவென ஆடையை தைத்தது.

"ஆமா.. ஆமா.. எனக்கு நல்லா தெரியுது. இதோ இந்த ஆடையை தைத்து முடித்து விட்டேன்" என்றார் தையல்காரர். தையல்காரரின் கைகள் விறுவிறுவென வேலை செய்தது. பூதம் இன்னொரு காலை எடுக்க தொடங்கியது.

பூதத்தின் கால்கள் அவரை நோக்கி வர ஒரு கன நொடியில் தைத்த துணியை கையில் எடுத்து கொண்டு மெழுகுவர்த்தியையும் ஊதி அணைத்து விட்டு அந்த கல்லறையிலிருந்து ஓட தொடங்கினார் தையல்காரர்.



“ஏய் நில்லு.. ஏய் நில்லு..” என பூதம் கத்தியது. அதன் கால்கள் ஓடும் அதிர்விலிருந்து மொத்த ஊரே நடுங்குவது போல இருந்தது. ஊரிலிருந்த தேவாலயத்தின் மணி “டங்.. டங்..” என அடிக்க தொடங்கியது.



பூதம் தையக்காரரை தொரத்தி கொண்டே ஓடியது .
தையக்காரர் தப்பிச்சோம்.. பொழச்சோம்.. னு தலை
தெறிக்க ஊரை பார்த்து ஓடி கொண்டிருந்தார்.
“என் கிட்டருந்து யாரும் இதுவரை தப்பிச்சது
கிடையாது” என்று கத்தியது பூதம்.




“நான் நிக்க மாட்டேன்” என்று
தையக்காரர் கத்தி கொண்டே ஓடினார்
துணியை கெட்டியமாக பிடித்து
கொண்டே கோட்டையை நோக்கி
ஓடினார் .



கோட்டையின் பெரிய மரக் கதவை தட்டிக்கொண்டு “திறங்க.. திறங்க..” என்று தையல்காரர் கத்தினார். சீக்கிரம் என்னை உள்ளே விடுங்கள் என்று கத்தினார்.
பூதத்தின் கைகள் அவரை பிடிக்க நெருங்கி கொண்டு வந்தது. அதே நொடியில் கதவும் திறந்தது சட்டென கோட்டை உள்ளே நுழைந்து விட்டார்.

இப்படி தான் ராஜாவுக்கு
அவருடைய அதிர்ஷ்ட ஆடை
கிடைத்தது.



தையக்காரருக்கு துணி பை முழுவதும் தங்க
நாணயம் கிடைத்தது.



பூதத்தை பொறுத்த வரை...



...பூதத்தை அந்த நாளுக்கு பிறகு யாரும் பார்க்கவில்லை. ஆனால் கோட்டையின் சுவரில் அதன் கை விரல் தடம் மட்டும் அப்படியே பதிந்து போனது.